# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.283/2015

வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 12–11–2025.

பெயர் = கனகராஜ் வா.சா.–2

வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) நான் விவசாயம் செய்து வருகிறேன். என் பெயரில் 5 ஏக்கர் நிலம் உள்ளது. அதற்கான பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் விவசாயி கிடையாது அதனால் தான் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னை நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தார்கள் என்றால் நானே வந்துவிட்டேன் என சாட்சி கூறுகிறார். வாதிகள் சீனிவாசன், சுந்தர்ராஜன் என்னை சாட்சி சொல்ல அழைத்தார்களா என்றால் இல்லை. வாதிகள் தனியாக உறவின்முறை வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த உறவின்முறையில் நான் மெம்பர் என்றால் சரிதான். அந்த உறவின்முறை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பதிவு செய்யவில்லை என சாட்சிகூறுகிறார். எங்கள் உறவின்முறையில் சுமார் 250 பேர் உள்ளோம். அந்த உறவின்முறை பெயர் பந்தல்குடி கிராமம் லிங்காபுரம் தெருவில் வசிக்கும் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் விவசாயமக்கள் உறவின்முறை என்றால் சரிதான். அந்த உறவின்முறைக்கு மினிட் புத்தகம் தீர்மான நோட்டு உள்ளதா என்றால் ஆமாம். தீர்மானம் பண்ணி எழுதுவோமா என்றால் ஆமாம். உறவின்முறை தலைவர் நான் தான். செயலாளர் 2ம் வாதி சுந்தர்ராஜன். பொருளாளர் கோவிந்தராஜ்.

(2) 1ம் வாதி சீனிவாசன் எந்தப்பொறுப்பிலும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்ய வாதிகளுக்கு அனுமதியளித்து தீர்மானம் போட்டுள்ளோமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் வாதிகள் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என தெரியுமா என்றால் தாவாச்சொத்து எங்கள் உறவின்முறைக்கு பாத்தியம் என கேட்டுள்ளோம் என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்து வருவாய் ஆவணங்களில் களம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. தாவாச்சொத்து களம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தாவாச்சொத்திற்கு எங்கள் உறவின்முறைக்கு பட்டா இல்லை என்றால் சரியல்ல. பட்டா உள்ளது என சாட்சி கூறுகிறார். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவாச்சொத்திற்கு எங்கள் உறவின்முறை பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் 1,2 பிரதிவாதிகள் எத்தனை லட்சம் செலவு செய்து கட்டுமானம் கட்டியுள்ளார்கள் என எனக்குத் தெரியாது.

(3) தாவாச்சொத்திலுள்ள மண்டபம், அதனைச்சுற்றியுள்ள கட்டிடம் அனைத்தையும் சேர்த்து மதிப்பு 1 கோடி இருக்குமா என்றால் எனக்குத் தெரியாது. தாவாச்சொத்து 1,2 பிரதிவாதிகள் உறவின்முறை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பொதுவாக அனுபவித்து வருகிறோம் என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்திலுள்ள மண்டபத்தின் சாவி 1,2 பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றால் சரியல்ல. வருவாய்த்துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தில் மின் இணைப்பு உள்ளதா என்றால் தெரியாது. தாவாச்சொத்தில் உள்ள கட்டிடத்திற்கான கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவாச்சொத்தில் உள்ள கட்டிடத்திற்கு எத்தனை வாசல், சன்னல்கள் உள்ளது என எனக்குத் தெரியாது. 1,2 பிரதிவாதிகள் தாவாச்சொத்தில் கட்டிடம் கட்ட எத்தனை வருடங்கள் ஆனது என எனக்குத் தெரியாது. 1,2 பிரதிவாதிகள் தாவாச்சொத்தில் கட்டிடம் கட்டும்போது போலீசில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. கட்டிடம் எப்போது கட்டப்பட்டது என்றால் 2016 ல் கட்டப்பட்டது. அப்போது நாங்கள் தடுத்தோம் என சாட்சி கூறுகிறார். வாதிகளும், பிரதிவாதிகளும் இதற்கு முன் ஒரே உறவின்முறையில் இருந்தோம் என்றால் சரிதான். எங்களது உறவின்முறை 2016 ம் வருடம் உருவாக்கினோம்.

(4) தாவாச்சொத்தில் மண்டபம் கட்ட உறவின்முறையில் எந்த வருடம் தீர்மானம் போட்டார்கள் என எனக்குத் தெரியாது. பிரதிவாதிகள் உறவின்முறையில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றும் எனக்குத் தெரியாது. வாதிகளும், பிரதிவாதிகளும் ஒன்றாக இருக்கும்போதுதான் தாவாச்சொத்தில் கட்டிடம் கட்ட வேண்டும் என தீர்மானம் போட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. தாவாச்சொத்தில் கட்டிடம் கட்ட உறுப்பினர்கள் தலைக்கு 1000 ரூபாய் கொடுக்க வேண்டும் என தீர்மானம் போட்டுள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. 1,2 வாதிகளும் தலைக்கு 1000 ரூபாய் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. நான் பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. தாவாச்சொத்தில் உள்ள கட்டிடத்தை வாதிகளின் உறவின்முறைக்கு வாங்கிகொடுக்க

வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் களத்தை கேட்டு தாக்கல் செய்துள்ளோம் என சாட்சி கூறுகிறார். களமாக ஒப்படைக்க வேண்டுமென கேட்கிறோம். தாவாச்சொத்தில் பயிர் செய்ததற்கு அடங்கல் கணக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவாச்சொத்தை களமாக பயன்படுத்தி விளைபொருட்களை பிரித்து எடுப்போம் என்பதற்கான ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை. தாவாச்சொத்து பிரதிவாதிகள் உறவின்முறைக்கு 06.07.1949 ம் தேதிய கிரய ஆவணத்தின்படி பாத்தியம் என்றால் சரிதான்.

(5) வா.சா.ஆ.2 ல் கிழமேலாக 45 கெஜம் உள்ளது என்றால் சரிதான். தென்வடல் கெஜம் 30 உள்ளது என்றால் தெரியாது. மேற்படி கிரயப்பத்திரத்தில் உள்ள சொத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ற்கு கிழக்கே வசந்தா, ராமசாமி, கந்தசாமி வகையறா இடம் உள்ளது என சாட்சி கூறுகிறார். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தாவாச்சொத்திற்கு வடக்கே ஓடை உள்ளதா என்றால் பாதையும், ஓடையும் உள்ளது என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் பாதை உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு தெற்கே T.A.S.அழகர்சாமி இடம் உள்ளது அவருக்கு முன்பாக யாருக்கு பாத்தியம் என எனக்கு தெரியாது. தாவாச்சொத்திற்கும் மேற்கே மதுரை–தூத்துக்குடி ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்தில் களமாக பயன்படுத்தி விளைபொருட்களை பிரித்து எடுப்போம் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. களமாக பயன்படுத்துவதற்கு உறவின்முறைக்கு வரி கொடுப்போமா என்றால் ஆமாம். எந்த வருடம் வரை வரி கொடுத்தோம் என்றால் 5,6 வருடத்திற்கு முன்பு கொடுத்தோம். ஏக்கருக்கு எவ்வளவு கொடுத்தோம் என்றால் 10 ரூபாய் அல்லது 50 ரூபாய் என கொடுப்போம். உறவின்முறையில் அதற்கு ரசீது வாங்குவோமா என்றால் இல்லை.

(6) உறவின்முறைக்கு நான் சொல்வதுபோல் களவரி கொடுப்பதேஇல்லை என்பதால் தான் ரசீது இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் 24 மனை தெலுங்கு செட்டியார் உறவின்முறை பிரதிநிதியாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் ஆமாம். அதற்கு எங்கள் உறவின்முறையில் அனுமதி குறித்து தீர்மானம் போட்டுள்ளோமா என்றால் இல்லை. அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இனிமேல்தான் தாக்கல் செய்ய வேண்டுமென சாட்சி கூறுகிறார். யார் வந்து தாக்கல் செய்வார் என்றால் இனிமேல் தான் தீர்மானம் போட வேண்டுமென சாட்சி கூறுகிறார். பிரதிவாதிகள்

உறவின்முறை அவர்கள் இஸ்டத்திற்கு பணம் வசூல் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் எப்போது வசூல் செய்தார்கள் என எனக்குத் தெரியாது. பிரதிவாதிகள் என்னிடம் பணம் வாங்கினார்களா என்றால் இல்லை. எங்கள் உறவின்முறையை சேர்ந்த நபர்களிடம் கட்டிடம் கட்ட பணம் வாங்கினார்களா என்றால் இல்லை. பிரதிவாதிகள் எவ்வளவு பணம் வசூல் செய்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. பிரதிவாதிகள் அவர்களுடைய உறவின்முறையில் உள்ள நபர்களிடம் பணம் வாங்கி தாவாச்சொத்தில் உள்ள கட்டிடத்தை கட்டியுள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது.

(7) பிரதிவாதிகள் கட்டிடம் கட்ட அனுமதி வாங்கினார்களா? இல்லையா? என எனக்குத் தெரியாது. ஊராட்சித்தலைவரை இவ்வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளோமா என்றால் எனக்குத் தெரியாது. ஊராட்சி மன்ற தலைவர் பதவி முடிந்து 6 மாதம் ஆகிறது. ஊராட்சி மன்றம் தற்போது யார் அருப்புக்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் நிர்வாகத்தில் உள்ளது. 1,2 பிரதிவாதிகள் கட்டுமானம் கட்ட ஆரம்பித்த பிறகு நாங்கள் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல அதற்கு முன்பாகவே தாக்கல் செய்துவிட்டோம் என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தில் கிழக்கு பக்கம் பொருள்வைப்பறையை முதலில் கட்டினார்கள் என்றால் தெரியாது. அந்த கட்டிடத்திற்கு உடனடியாக மின்இணைப்பு வாங்கிவிட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. மெயின் கட்டிடத்திற்கு வடகிழக்கே பிரதிவாதிகள் ஆழ்துளைக்கிணறு அமைத்துள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி கிணற்றில் மோட்டார் அமைத்து கட்டிடம் கட்டினார்கள் என்றால் எனக்குத் தெரியாது. கட்டிடம் கட்டக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி மனு தாக்கல் செய்தோமா என்றால் ஆமாம் அம்மனுவானது எந்த நிலையில் உள்ளது என்றால் நிலுவையில் உள்ளது என சாட்சி கூறுகிறார். நாங்கள் தாக்கல் செய்த இடைமனு 30.06.2016 லேயே தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்பேரில் மேல்முறையீடு செய்தோமா என்றால் தெரியாது.

(8) நீதிமன்ற தீர்ப்பு சரியாக உள்ளது என நாங்கள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை களமாக பயன்படுத்த வேண்டும் வேறு உபயோகம் செய்யக்கூடாது என வா.சா.ஆ.2 ல் உள்ளதா என்றால் இல்லை. தாவாச்சொத்தை எந்த காலத்திலும் பிரதிவாதிகள் உறவின்முறை களமாக உபயோகப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. திருமண மண்டபம் கட்டுவதற்கு என்ன விதிமுறைகள் பின்பற்றவில்லை என்றால் பஞ்சாயத்திலும், அரசாங்கத்திலும் அனுமதி வாங்கவில்லை என

சாட்சி கூறுகிறார். பிரதிவாதிகள் அனுமதி வாங்கவில்லை என நாங்கள் புகார் கொடுத்துள்ளோமா என்றால் ஆமாம். எந்த தேதியில் கொடுத்தோம் என்றால் ஞாபகமில்லை. அந்த புகார் மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அந்த புகார் மனுவின்மீது பஞ்சாயத்திலோ, அரசாங்கத்திலோ எந்த நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை. திருமண மண்டபத்திற்கு பார்க்கிங் வசதி போடவேண்டுமென எந்தச்சட்டத்தில் உள்ளது என்றால் தெரியாது. தாவாச்சொத்தில் உள்ள மண்டபம் பிரதிவாதிகள் உறவின்முறைக்கு சமுதாயக்கூடமாகதான் கட்டியுள்ளார்கள் திருமணமண்டபமாக கட்டவில்லை என்றால் சரியல்ல. T.A.S. அழகர்சாமி என்பவர் எங்கள் ஊரில் திருமணமண்டபம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். கருத்தநாடார் என்பவர் எங்கள் ஊரில் திருமணமண்டபம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். பங்காரு திருமணமண்டபம் உள்ளது என்றால் சரிதான். அது பந்தல்குடி பஞ்சாயத்தின் முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் பாலாஜி பத்ரிநாத்திற்கு பாத்தியப்பட்டது. K.R திருமண மண்டபம் உள்ளது. நிர்மல் திருமண மண்டபம் உள்ளது. மேலே சொன்ன திருமணமண்டபங்களில் கார்பார்க்கிங் இடம் விட்டுள்ளார்களா என்றால் T.A.S. அழகர்சாமி மற்றும் கருத்தநாடார் மண்டபங்களில் மட்டும் விட்டுள்ளார்கள். பத்ரிநாத் என்பவரின் திருமணமண்டபத்திற்கு வரும் கார்கள் புறம்போக்கு நிலத்தில்தான் நிற்கும் என சாட்சி கூறுகிறார்.

(9) தூத்துக்குடி சாலையில் வாகனங்கள் நிறுத்தினால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படும் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா மண்டபத்திற்கு கிழக்கே ரோட்டின் அகலம் 150 அடி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதில் தார் ரோடு 15 அடி என்றால் சரியல்ல 25 அடி இருக்கும். தாவாச்சொத்தில் உள்ள மண்டபத்தில் இதுவரை கல்யாணம் மற்றும் சுபநிகழ்ச்சிகள் எதுவும் நடக்கவில்லை என எதனடிப்படையில் சொல்கிறேன் என்றால் நடக்கவில்லை என சாட்சி கூறுகிறார். 1,2 பிரதிவாதிகள் தாவா மண்டபத்தில்தான் சுபநிகழ்ச்சிகளை நடத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் 1,2 பிரதிவாதிகள் உறவின்முறை எப்போதும் களமாக பயன்படுத்தியதில்லை என்றாலும், அவரவர் இடத்தில்தான் களமாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், அரசாங்க களத்தை பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. தற்போது கதிர் அறுக்கும் மிசின் வைத்துதான் அறுவடை செய்து வைக்கோல் தனியாக, தானியம் தனியாக பிரித்துக்கொள்கிறார்கள் என்றால் வசதி படைத்தவர்கள் அவ்வாறு செய்து கொள்கிறார்கள். என்னைபோல் ஏழைகள் களத்தை

பயன்படுத்துகிறோம் என சாட்சி கூறுகிறார். கடைசியாக எந்த வருடம் களத்தை பயன்படுத்தினோம் என்றால் கட்டிடம் கட்டுவதற்கு முன்பு பயன்படுத்தினோம் என சாட்சி கூறுகிறார். களமாக பயன்படுத்தினோம் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.11.13 10:16:29 +0530